செ.கு.எண்:-87

நாள்:-23.07.2010

பொதுத் துறை

# செய்திக் குறிப்பு

இந்திய ஆட்சிப் பணியில் சேர்வதற்காக திரு செ. உமாசங்கர், இ.ஆ.ப., அவர்கள் தனது இருப்பிடம், மதம் ஆகியவற்றை மாற்றி ஆதி திராவிட (Scheduled Caste) இனத்தைச் சார்ந்தவர் என்ற தவறான சாதிச் சான்றிதழ் பெற்றுள்ளார் என்ற புகார்களின் அடிப்படையிலும் அவர் படித்த பள்ளி, கல்லூரி, தேர்வு இயக்ககம் மற்றும் தொடர்புடைய அலுவலகங்கள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட ஆவணங்களின் அடிப்படையிலும் அனைத்திந்திய ஆட்சிப் பணி (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதிகள், 1969–ல் மாநில அரசுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் இவர் தொடர்ந்து பணியில் நீடிப்பது பொது நலனுக்கு உகந்தது அல்ல என்பதாலும், இது தொடர்பாக ஒழுங்கு நடவடிக்கை மற்றும் உரிய அமைப்பின் மூலம் விசாரணை மேற்கொள்ள இருப்பதாலும் திரு செ. உமாசங்கர் அரசால் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9